2003 ஜனவரி 29]

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

2. அறிவிப்புகள்--தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

(தி.மு.க. உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கை அருகில் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)

(தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகே நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம். திரு. கணேசன். (குறுக்கீடுகள்)

3. தகவல் கோரல்--தொடர்ச்சி

(அ) 28-1-2003-ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்கியது--தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்ப்பை நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். இப்போது அவையின் நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று மாண்புமிகு துரைமுருகன் அவர்களையும், மூத்த உறுப்பினர்களையும், மணி போன்றவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால், அவையை விட்டு வெளியேற்ற வேண்டிய நிலைமை இருக்கும் என்று எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-10

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்றாமல், பேரவைத் தலைவருடைய இருக்கைக்கு அருகில் வந்து, கூச்சலும், குழப்பமும் உருவாக்கிக் கொண்டு அவையை நடத்தவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கின்ற இந்த முறையைக் கண்டிக்கும் வகையில் தி.மு.க.வினுடைய மாண்புமிகு உறுப்பினர்களை அவையை விட்டு